# 15 நாட்கள் கணக்கீட்டிற்கு மாற்றாக 30 நாட்கள் கணக்கீட்டு முறை அமல் – விளக்கம்

1. தமிழ்நாடு மின்வழுங்கல் தொகுப்பு விதி எண்.14(1) ன் கீழ் தாழ்வழுத்த மின்நுகர்வோர்களுக்கு மின் கணக்கீடு பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 5 நாட்கள் கால அவகாசம் அளிக்கப்பட வேண்டும். மின் துண்டிப்பு செய்யப்படுவதற்கு முன் 15 நாட்கள் Notice Period கால அவகாசம் அளிக்கப்பட வேண்டும், இந்த 15 நாள் கால அவகாசத்தில் வட்டி ஏதும் விதிக்கப்படமாட்டாது என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட விதியினை அமல்படுத்த வேண்டி மின்வாரியம் இந்தப் புதிய நடைமுறையை கொண்டு வந்துள்ளது.

3. பழைய நடைமுறையில் ஒரு சில நுகர்வோர்களுக்கு 30 நாட்கள் கால அவகாசமும், ஒரு சிலருக்கு 20 நாட்கள் மட்டுமே கால அவகாசமும் கிடைத்து வந்தது. இந்த பாகுபாட்டை தவிர்க்கவும் நுகர்வோர் அனைவருக்கும் ஒரே மாதிரியாக 20 நாட்கள் கால அவகாசம் கிடைக்கவும் இந்தப்புதிய நடைமுறை மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4. மேலும் , இப்புதிய நடைமுறையால், நுகர்வோர்கள் கடைசிநேர கூட்ட நெரிசலை தவிர்த்து அனைத்து வேலை நாட்களிலும் மின்கட்டணம் செலுத்த இயலும்.

5. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி புதிய நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் வாரியத்தில் உள்ள கணக்கீட்டுப் பணியில் உள்ள ஊழியர்களையும், கணிணிகளையும் சரியான விகிதத்தில் பயன் படுத்துவதற்காகவும், வாரியத்திற்கு வருவாய் சீராக வருவதற்காகவும், அக்கவுண்டண்ட் ஜெனரல் ஆடிட்டின் குறிப்பினை நடைமுறைப்படுத்தவும் , இந்த முறை நடை பெற்று வருகிறது.

6. இப்புதிய நடைமுறைக்கு நுகர்வோர்களிடமிருந்தும் மின் ஊழியர்களிடமிருந்தும், மின்வாரிய அலுவலர்களிடமிருந்தும் அதிக வரவேற்பு கிடைத்து வருகிறது. மேலும் 12(3) முத்தரப்பு ஒப்பந்தம் போடப்பட்டு இந்த புதியமுறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது . எனவே நுகர்வோர்கள் இந்த புதியமுறைக்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளபடுகிறார்கள்.

இப்படிக்கு

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்